# பெரியபுராணம் புலப்படுத்தும் அன்றைய சமூகச்சூழலில் பெண்களின் நிலை

சி.அருணா
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி (தன்னாட்சி),
(பெரியார் பல்கலைக்கழக இணைவு பெற்றது) சேலம் - 16. தமிழ்நாடு, இந்தியா.
(கைபேசி : 70104 92451)
நெறியாளர் : முனைவர் தி.ஆனந்தவள்ளி
உதவிப் பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி (தன்னாட்சி),
(பெரியார் பல்கலைக்கழக இணைவு பெற்றது) சேலம் - 16. தமிழ்நாடு, இந்தியா.

## முன்னுரை

காலம் காலமாக பழமைச் சிறையில் அடிமைப்பட்டிருக்கும் உயிரற்ற, உணர்வற்ற எந்திரங்களாகவே பெண்கள் வாழ்கின்றனர். மனித சமுதாயத்தின் சரிபாதியாய் உள்ள பெண்பாலரின் உரிமை விடுதலைக்காக பல்வேறு பெண்ணிய அமைப்புகள் உலகளவில் தோன்றினாலும், உணவு, உடை, உறையுள், செய்தொழில், வாழ்க்கை முறை போன்றவற்றில் இன்னமும் நாகரிகம் அடையாமல் விலங்குக்கடுத்த நிலையில் வாழும் கூட்டுப்புழுவாகவே பெண்கள் வாழ்வில் போராடிக் கொண்டிருக்கின்றனர். சங்ககாலம் முதல் தற்காலம் வரை பெண்கள் சரிபாதி என்று கூறினாலும் ஏனோ இச்சமுதாயம் அடிமைத்தனத்திலிருந்து மீளவேயில்லை என்பது உண்மையாகும்.

பெண்கள் ஆணாதிக்கத்தின் பிடியிலிருந்து மீளாதவாறும், எவ்வித சமுதாய சிந்தனை தோன்றாதவாறும் அடிமைத்தனமாகவே கட்டாயப்படுத்துகின்றனர். காலம் மாற மாற பெண்களின் நிலை மாறிக் கொண்டே சென்றாலும், பெண்களுக்கான உரிமை, சுதந்திரம், விருப்பு வெறுப்பு போன்ற எவ்வித மன உணர்வை உணராமல் இச்சமுதாயம் பெண்களின் மீது சுமையை ஏற்றி இன்புறுகின்றன. எவ்வித சமுதாய உணர்வு எதுவும் கிடைக்கப்பெறாமல் மறுக்கப்பட்டுள்ள நிலையை பக்தி இலக்கிய காலத்தில் அன்றைய சமூகச்சூழலில் பெண்களின் நிலையையும், அவலங்களையும், புலம்பல்களையும் எவ்வாறு எதிர்கொண்டு வாழ்ந்துள்ளனர் என்பதனை காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### சமூகம் பற்றிய நிலை

உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இருப்பிடம் போன்றவை அன்றாட மனிதனுக்கு அடிப்படைத் தேவையாகும். எந்த ஒரு தனிமனிதனால் தன் தேவையை நிறைவேற்றி கொள்ளமுடியாது. மற்றவர்களின் கூட்டுறவால் தான் அத்தேவையை நிறைவேற்றி கொள்ளமுடியும். மாந்தர் தம் அவசியத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகவும், கூட்டுறவாக வாழ்வதற்காகவும் ஏற்பட்ட ஒன்றுதான் சமுதாய அமைப்பாகும். பெண்களை இச்சமுதாயத்தில் நிலவுகின்ற பண்பாட்டுக் கட்டமைப்பு, அரசியல், பொருளாதாரம், சமயசடங்குகள், நம்பிக்கைகள் போன்ற கொள்கைகளில் எவ்வாறு அச்சூழலை எதிர்கொண்டு வாழ்ந்தனர் என்பதனை அறிய உதவுகின்றது.

### சமூகத்தில் பெண்களின் நிலை

ஆணுக்கு பெண் சரிநிகர் சமம் என்ற நிலை ஏனோ இச்சமுதாயம் பெண்களின் ஆற்றலை இவ்வுலகிற்கு தனது அடையாளத்தை நிலைநாட்டுவதற்கு தடை செய்கின்றது. மூவுலகை ஆளும் சிவபெருமான் தனது உடம்பில் சரிபாதியாக உமையம்மைக்கு இடமளித்து அர்த்தனாரீஸ்வரர் என்னும் பெயர் பெற்று விளங்கினாலும் அப்பெருமானை வணங்கும் மெய்யடியார்கள் மனையில் வாழும் பெண்களுக்கு பல துன்பங்களை அளித்து பெண்களின் மன உணர்வை உணராது தமது விருப்பங்களை அப்பெண்களின் மீது திணித்து ஆணாதிக்கத்தின் மேன்மையை செலுத்துகின்றதனை அறியமுடிகின்றது.

பெண்கள் தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்ந்து பெற்றோர், கணவன், மகன் எனும் குடும்ப கூட்டுக்குள் அடங்கி கிடக்கும் கூட்டுப்புழுவாக வாழும் வாழ்வியல் கூறுகளாக பெண்கள்

வாழ்ந்துள்ள நிலையை வெளிப்படுத்துகின்றது. பெண்கள் கணவரின் தொண்டில் உதவி புரிந்தும், அடிமைப்பட்டும், தன்மானம், சுதந்திரம், அதிகாரம் போன்ற அடிப்படைக் கொள்கைகள் எதுவும் கிடைக்கப்பெறாமல் வெறும் களிமண்ணாகவே வாழ்ந்துள்ள அன்றையச் சமூகச்சூழலின் பின்புலத்தை பற்றி அறிய உதவுகின்றன. இதனை,

**"மதியிது மதியிது பெண்ணே – புண்ணிய**
**வதியல்ல வோநல்ல மகராசி கண்ணே"**[1]

என்று பெண்மதி மாலையில் பெண்களுக்கு அறிவும் திறமையும் பெற்று, பெண்கள் தாயாக, பொறுமை நிறைந்தவளாக, நல்ல மனைவியாக, தேர்ந்த அமைச்சராக பெற்று திகழ வேண்டும் என பல அறிவுரைகள் கூறினாலும், அதன் உட்கருத்துக்களும் பொருளும் ஆழ்ந்த பண்பும் பெண்ணிய சிந்தனைகளும் பொதிந்து கிடக்கின்றதனை எவரும் அறிந்திலர்.

**சங்ககாலத்தில் பெண்களின் நிலை**

சங்ககாலத்தில் குறிப்பாக முந்தைய ரிக்வேதகாலத்தில் பெண்கள் சமமான உரிமைகளை பெற்று மதிக்கப்பட்டனர். பிறகு சமூகத்தில் பெண்களின் நிலை சற்று மோசமடைந்து இரண்டாம் நிலைக்கு தள்ளப்பட்டனர். புதிய சமூக நடைமுறைகள், பழக்க வழக்கங்கள் சமூகத்திற்குள் நுழைந்து பெண்களின் சுதந்திரத்திற்கு சில வரம்புகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. பின் வேதகாலத்தில் சதி என்னும் பழக்கத்தினால் விதவைகள் தாங்களாகவோ அல்லது கட்டாயத்தின் மூலமாகவோ கணவரின் சிதையோடு சேர்த்து எரிக்கப்பட்டனர். அன்றைய காலத்தில் தந்தைவழி சமூகம் மிக கடுமையானதாக மாறியது பெண்களுக்கு வேதாகமங்களை படிக்க தடைசெய்யப்பட்டது. குழந்தை திருமணம்,பெண் சிசுகொலை, மற்றும் அடிமைத்தனம் போன்ற சமூக தீமைகளால் அவதிக்குள்ளானார்கள். பல நூற்றாண்டுகளாக சமூகரீதியாக பெண்கள் ஒடுக்கப்பட்டிருப்பதனை தொல்காப்பியத்தில் சதி பற்றி,

**"நல்லோள் கணவனொடு நளிஅழல் புகீஇச்"**[2]

என்று புறத்திணையியலில் கணவன் இறந்த பின்பு மனைவி தீப்பாய்ந்து இறத்தலை பற்றி கூறப்பட்டுள்ளது. ஆணுக்கு நிகராக பெண்கள் தன்னை அடையாளப்படுத்துவதற்கு முற்பட்டாலும், பெண்களின் சிந்தனைகள் சமூகப்போக்கினை ஒட்டியே சென்ற நிலையை அறிய முடிகின்றது.

**நீதி இலக்கியத்தில் பெண்களின் நிலை**

நீதி இலக்கிய காலத்தில் பெண்ணின் பெருமை பேசினாலும் ஆணாதிக்கத்தின் மேற்பார்வையிலேயே பெண்களின் வாழ்வு அடைப்பட்டுகிடக்கின்றன. பெண்கள் ஆணை சார்ந்தே வாழவேண்டும், கணவனுக்கு தொண்டு புரிதல் வேண்டும் சுற்றத்தாருடன் இணைந்து நன்னெறியுடன் வாழ வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகின்றன. பெண்களின் அடிமைத்தனத்தை வலியுறுத்துகின்றன.

**காப்பிய இலக்கியத்தில் பெண்களின் நிலை**

காப்பிய காலத்திலும் பெண்களுக்கான சம உரிமை அளிக்கப்படாமல் அடிமையாகவே சித்தரிக்கப்பட்டிருப்பது உண்மையாகின்றது. பெண்களுக்கு இல்லற கடமைகளை மனதில் புகுத்தி தனக்கான வாழ்வை மேற்கொள்ளாது கூட்டுப்புழுவாகவே வாழ்வதை காணலாம். கணவனின் பாலியல் ஒழுக்கத்தை பெண்ணால் கண்டிக்க இயலாத நிலையிலும், கண்டிப்பது கற்புநெறிக்கு புறம்பானது என்னும் பெண்ணுக்கு போதிக்கப்பட்டிருந்தனர். அதனை மணிமேகலையில்,

**"நன்னீர் பொய்கையில் நளி எரி புகுவர்"**[3]

என்ற பாடலின் மூலம் கணவனை இழந்த பெண்களுக்கு தண்டனை வழங்கும் ஆணாதிக்கம் பெண்கள் குளிர்ந்த நீர்நிலையில் புகுந்து உயிரை மாய்த்துக் கொள்வதை வலியுறுத்துகின்றது. ஆண்களின் விருப்பம் தான் பெண்களுக்கு இருக்க வேண்டும் என்றும் பெண்களுக்கு என்று தனி எண்ணம் இருக்காது, இருக்கவும் கூடாது என்ற எண்ணத்தை இச்சமுதாயம் பிரதிபலிக்கின்றது.

**பக்தி இலக்கியத்தில் பெண்களின் நிலை**

சோழப் பேரரசின் வளர்ச்சி காலகட்டங்களில் தென்கை சமூக இருப்பை ஆராயும்போது அரசர்கள் வேளாளர்கள் நல்லிணக்கங்களும், உறவுகளும் அதிகரித்துவிட்டதை காணமுடிகின்றது. இவற்றின்

பின்புலத்தில் பெரியபுராணம் தோன்றி சைவ மீட்சிக்கும், திருமுறை இயக்க மீட்சிக்கும் களம் காணப்பட்டன. போட்டி, பகை, இடம்கொடுத்தல், தமதாகக் கொள்ளல் என நான்கு வகைகளான சமூக மாற்றங்களை பெற்று விளங்குகின்றன என்று இராபர்ட் பார்க் மற்றும் பார்க்ஸ் என்ற அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். பக்தி இலக்கியங்களை பொறுத்த வரையில் முழுவதுமே தந்தை கடவுள் வழிபாடு மட்டுமே அமைந்திருக்கின்றன. தாய் தெய்வ வழிபாடு என்பது அரிதானதாகும். தந்தை கடவுள் வழிபடும் பக்தைகளாகவே விளங்குகின்றனர். அன்றைய சமூகத்தில் பெண்களை மதிக்காமல், அடிமைச் சங்கிலிப்போலவே நடத்தினார்கள். பெரியபுராணத்தில் திருஞானசம்பந்தரும், சுந்தரரும் பெண்களுக்கு மதிப்பளித்து, மனஉணர்விற்கு மரியாதை அளித்தும் பெண்களின் தன்மையை மேன்மையுற செய்துள்ளதை காணமுடிகின்றது.

**பாம்புகடித்து மரணித்த அங்கம் பூம்பாவை**

திருமயிலை தலத்திலே சிவநேசர் என்ற வணிகர் வாழ்ந்து வந்தார். சிவபெருமான் மீது மிகுந்த பக்தி கொண்டவர். பூம்பாவை எனும் அழகிய திருமகளை பெற்றெடுத்தார். ஆளுடைய பிள்ளையின் தொண்டினையும் பெருமையையும் கேள்விபட்ட சிவநேசர் தம் மகள் பூம்பாவையை திருஞானசம்பந்தருக்கு திருமணம் செய்து முடிக்க எண்ணினார். ஆனால் கடவுளின் எண்ணம் வேறாக இருந்தது.

ஒரு நாள் பூம்பாவை தோட்டத்தில் தோழிகளுடன் பூக்களை பறித்துக் கொண்டு இருந்த போது பாம்பு தீண்டி மரணித்தாள். ஆகையால், தந்தையாரான சிவநேசர் அப்பூம்பாவை திருஞானசம்பந்தர்க்குரியவள் என்ற எண்ணம் தோன்றியதனால், சம்பந்தர் இங்கு வந்து சேருகின்ற காலம் வரையிலும் பூம்பாவையின் உடலை தீயில் இட்டு எரித்து அடங்கியபின் மீதியாகவுள்ள எலும்புகளையும் சாம்பல்களையும் குடத்தில் சேமித்து வைத்து அதனை கன்னிமாடத்திற்கு சென்று பூம்பாவை வசித்த இடத்திலே,

> **“மாலை சாந்தொடும் மஞ்சனம் நாள்தொறும் வழாமைப்**
> **பாலின் நேர்தரும் போனகம் பகலில் விளக்கு இனைய**
> **சாலும் நன்மையில் தகுவன நாள்தொறும் சமைத்தே**
> **ஏலுமா செய யாவரும் வியப்பு எய்து”**[4]

என்ற பாடலின் மூலம் அந்த குடத்திற்கு காவலுடன் பஞ்சனையில் வைத்தார். பொன், முத்துமாலைகள், நகைகள் முதலியவற்றை அலங்கரித்து நாள்தோறும் சந்தனம் பூசி, திருமஞ்சனம் செய்து, பால் சோறு வைத்து பூம்பாவையை பாதுகாப்பது போல செய்து வருவதை கண்டு அனைவரும் வியப்படைந்தனர்.

**உயிர்த்தெழுந்த பூம்பாவை**

திருஞானசம்பந்தர் திருவொற்றியூர் வந்திருப்பதை அறிந்த சிவநேசர் அவரை சந்தித்து வணங்கினார். கன்னிமாடத்திலே வைத்திருந்த குடத்தைக் கொண்டுவந்து சம்பந்தர் முன் வைத்து பூம்பாவையை பற்றிய விவரங்களை கூறி அழுது புலம்பினார். சம்பந்தர் திருமயிலை கபாலீஸ்வரரை வேண்டி,

> **“மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்**
> **கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்**
> **ஒட்டிட்ட பண்பி னுருத்திரப் பல்கணத்தார்க்**
> **கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்”**[5]

என்ற பதிகத்தை பாடிமுடித்தார். பாடிமுடித்ததும் குடத்தை உடைத்துக்கொண்டு இலக்குமியாம் திருமகள் எழுந்தது போல அழகிய பூம்பாவையார் எழிலான முழு உருவத்துடன் தோன்றினாள். அதனை கண்டு மக்கள் வியந்து போற்றினார்கள். அழகுக்கு அழகு செய்தது போல் பூம்பாவை உயிர், பெற்று எழுந்த தன் மகளைக் கண்ட சிவநேசர் ஆளுடைய பிள்ளையின் பாதங்களில் வணங்கி நின்றார்.

சிவநேசர் தம் மகளை முன்பே சீர்காழிச் செம்மலுக்கு தந்தேன் என்று கூறியிருந்தபடியால் அக்கருத்தினை தெரிவிக்க வேண்டி சம்பந்தர் முன் வணங்கி நின்றார். அடியேனுடைய அருமையான மகளாம் பூம்பாவையைத் தாங்கள் திருமணம் செய்து கொண்டு அருள்புரிய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதனை கேட்ட ஆளுடையபிள்ளை சிவநேசரே நீங்கள்

பெற்று வளர்த்த உம் மகள் பாம்பு தீண்டிய நஞ்சு தலைக்கு ஏறி இறந்துவிட்டாள். அதன்பிறகு இறைவனருளால் அப்பூம்பாவையை உயிர்ப்பித்தேன். உம் மகளுடைய எலும்புக்கும் சாம்பலுக்கும் நான் உயிர் கொடுத்ததனால் நான் இவளுக்கு தந்தை ஆவேன். எனவே அவளை மணந்து கொள்ளுமாறு நீங்கள் கூறுவது சரியல்ல அது முறையும் அல்ல என்று உரைத்து, சிவநேசரின் கோரிக்கையை மறுத்துவிடுகிறார். பூம்பாவை தன் வாழ்நாள் முழுவதுமே கன்னியாகவே இருந்து இறைவன் தொண்டு செய்து இறைவனடி புகுகின்றார். மரணித்த பின்பும் கூட பெண்ணுக்கான இறுதி சடங்கினை செய்தும், மூட நம்பிக்கையாலும், பக்தியின் ஆளுமையாலும் பெற்றோர்களே பெண்ணின் உணர்வினை மறுத்துக் கட்டாயப்படுத்துகின்றனர்.

**சுந்தரருக்கு மகளாக உருவாதல்**

கோட்புலியார் எனும் படைத்தலைவரின் மகள்களான சிங்கடி வனப்பகை என்ற இரு பெண்களை சுந்தரருக்கு மணம் முடிக்க எண்ணினார். அப்பெண்மணிகள் தம்வாழ்வை சுந்தரருக்காக வாழ்ந்து கொண்டிருந்தனர். பெண் ஒருத்தி ஒருவனை நினைத்தால் மணம் செய்து வாழ்வது வரை அவனுக்காகவே காத்திருக்கிறாள் என்பதனை,

**“கார்கூந்தல் நிறை**
**வெண்மலர் சூடி**
**உன்வழி பார்த்துக்**
**காத்திருந் தேன்**
**கருங்கூந்தல் இடை**
**பெண்நரை ஓடியும்**
**உனக்காகவே வாழ்கிறேன்”**[6]

என்ற கவிதையின் மூலம் இளமையில் காத்திருந்தவாறே முதுமையிலும் காத்திருப்பதாக பெண்ணொருத்தி பேசுகிறாள். அன்று உனக்காகவே காத்திருந்தேன், இன்று உனக்காகவே காத்திருக்கிறேன் என்ற பொருளில் ஆணுக்காகப் பெண்மை தவம் செய்வதாகக் கூறுகின்றார். ஆனால் சுந்தரரோ அப்பெண்மணிகளை தம்மகள்களாகவே பாவித்து நல்வாழ்வளித்து போற்றுகின்றார். அச்சமயத்தில் அப்பெண்மணிகளின் மனநிலையை உணர்ந்த சுந்தரர், சுதந்திரம் அளித்து வாழ்த்தியுள்ளார். அக்கால பெண்களுக்கு முழுசுதந்திரம் கிடைக்கவில்லை என்றாலும் ஆணாதிக்கம் மேலோங்கியிருப்பதனை காணலாம். பெண்களுக்கு எவ்வித உரிமையும் அதிகாரமும், பொருளாதார சிந்தனையும் எதுவும் கிடைக்கபெறாமல் பெற்றோர்களே பெண்களின் திருமண வாழ்வை நிர்ணயித்து குடும்பக் கூட்டுக்குள் அடைத்துவிடுகின்றனர். தனக்கான ஓர் அடையாளத்தை பெறுவதற்கு முற்படும் போது இச்சமுதாயம் அதனை மறுத்து தடை செய்கின்றது. பெற்றோர்கள் பெண்களின் மீது குடும்பச் சுமையை அளித்து மன உணர்வுக்கு மதிப்பளிக்காமல் திணிக்கின்றனர்.

சுந்தரரும், சம்பந்தரும் பெண்களின் மனதினை உணர்ந்து பெண்மையின் தன்மையை அறிந்து மணம் முடிக்க வந்த பெண்களை தமது மகளாக ஏற்று அருள்புரிந்தனர். பெண்களின் மனதில் என்ன உணர்வு இருந்தாலும் அதற்கான மதிப்பீட்டினை அளித்து வாழ்வில் மேன்மையடையச் செய்துள்ளனர். பெண்கள் நாட்டின் கண்கள் என்று புகழாரம் சூட்டினாலும், ஏனோ குடும்ப வாழ்வில் சுமைத்தாங்கியாகவே இருப்பதனை,

**“வீடு, நாற்காலி, மேஜை, சுவர்கள் கடிகாரம்**
**இவற்றுடன் ஒரு பெண் எந்திரம்**
**கண்களைக் குருடாக்கி, காதுகளைச் செவிடாக்கி**
**சொற்களை இடிந்து**
**மனதைப் புண்ணாக்கி**
**தியாகக் கடலில் மூழ்கியதால்**
**சந்தோஷமாய் இருக்கும் யந்திரம்”**[7]

என்னும் கவிதையில் பெண் பிம்பத்தை நிஜமான பெண் பிம்பத்தை பற்றி எடுத்துரைக்கின்றது. அக்கால பெண்கள் தங்களுடைய திறமையை வெளிக்கொணர்ந்தாலும் தெளிவான பேச்சு, தெளிவானபார்வை, ஆராயும் தன்மை பெற்று விளங்கினால் பெண்களின் முன்னேற்றம் வெளிப்படுவதனை அறியமுடியும்.

**முடிவுரை**

பாரதி கண்ட புதுமை பெண்ணாக வாழ வேண்டும். பழமை எனும் சிறையிலிருந்து விடுதலை பெறுபவளாக, பண்பாட்டுகூறுகளின் வெளிப்பாடாக பெண்கள் மாற வேண்டும். சதி எனும் பழக்கத்தினை தகர்த்தெறிந்து, அடிமை எனும் கொள்கையிலிருந்து விடுபட்டு, இச்சமுதாயத்தில் தனக்கென ஓர் அடையாளத்தை நிலைநாட்ட முற்பட வேண்டும். பெண்கள் எல்லாத்துறையிலும் சிறந்து விளங்க வேண்டும். பெண்களுக்கு அனைத்துவிதமான மதிப்புகளையும், மரியாதைகளையும் வழங்கப்பட வேண்டும். பாலியல் ஒழுக்கம், கற்பு எனும் பண்பை ஆண்களும் உணரசெய்து மேம்படுத்த வேண்டும். காலம் மாற மாற பெண்களின் நிலையும் மாற வேண்டும். சுதந்திரம் என்பது உடல் அளவில் மட்டுமல்லது மனதளவில் சுதந்திரமாக இருக்க வேண்டும். பருவ வயதை அடைந்தவுடன் பெண்களை பெற்றோர்கள் மணம் முடித்து வாழ்வை மேற்கொண்டு கணவன் சொற்படி நடக்க வேண்டும் என்று பெண்களின் மனதில் திணித்து கனவை சிதறடிக்கின்றனர். இச்சமுதாயத்தில் பெண்கள் நிலைபெற்ற வாழ்வை மேற்கொள்ளவேண்டும்.

**அடிக்குறிப்பு**

1) வேதநாயகர் போற்றிய பெண்மை முனைவர்.சரளா இராசகோபாலன், பக்கம் எண்.29, அன்பு பதிப்பகம், 63-அ.டாக்டர் அரங்காச்சாரி சாலை, சென்னை– 600028, பதிப்பு-1999.
2) தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணர் உரை, பக்கம்-127, சாரதா பதிப்பகம், சென்னை-14, பதிப்பு-2005.
3) மணிமேகலை மூலமும் உரையும் புலியூர்கேசிகன், பா.எண்.47, ஸ்ரீ பாரதி பதிப்பகம், சென்னை-33.
4) திருத்தொண்டர்புராணம் எனும் பெரியபுராணம் மூலமும் உரையும், புலவர் பி.நடராசன் தொகுதி-III, பாடல்-297, பக்கம்-496, உமா பதிப்பகம், சென்னை-1, பதிப்பு-2005.
5) பெண்ணின் பெருமையைப் புலப்படுத்தும் பெரியபுராணம் ரேவதி பாலசுப்ரமணியன், பக்கம்-241, எல்கேஎம் பப்ளிகேஷன், சென்னை-17, பதிப்பு-2008.
6) பெண் இன்று நேற்று நாளை தாயம்மாள் அறவாணன், பக்கம்-70, யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ், சென்னை-4, பதிப்பு-2003.
7) காபயா பெண்ணியசிந்தனைப் போக்குகள், தொகுப்பாசிரியர் முனைவர் கி.இலட்சுமி, பக்கம்-3, பதிப்பு-2010.